JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **3/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | மோகனசுந்தரம் **(Retired VAO)** | Village | வீரக்கேரளம், வடவள்ளி, கோவை |
| Father's Name | பொன்னுசாமி | Taluk | |
| | | Age | |

**Accused absent. Petition U/s.317 Cr.P.C., filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 05.11.2025.**

**முதல் விசாரணை**

1) நான் ஈரோடு மாவட்டம் சித்தோடு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக 2009 ம் வருடம் பணிபுரிந்து விட்டு 2010 ம் வருடம் மே மாதம் 31 ம் தேதி பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் சித்தோடு கிராம நிர்வாக அலுவலாராக பணியில் இருந்த போது 22.03.2009 ம் தேதியன்று சித்தோடு ஆய்வாளர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் வழக்கின் புலன் விசாரணைக்கு உதவ வருமாறு கேட்டுக்கொண்டதின் பேரில் அப்போது சுமார் 6 மணியளவில் சித்தோடு நால் ரோட்டில் மாருதி ஜென் காரை நிறுத்தி ஆய்வு செய்தார். அதில் பாலுசாமி, வடிவேல், மாரியப்பன், ரகு என்கிற முரளிதரன் ஆகியோர்களை விசாரித்து அவர்கள் பெயர் விலாசத்தை சித்தோடு காவல் நிலைய காவல் ஆய்வாளர் கேட்டார்.

2. அன்றைய தினம் 6.15 மணிக்கு பாலுசாமியுடன் இருந்த வடிவேல், மாரியப்பன், ரகு என்கிற முரளிதரன் ஆகியோர்கள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததில் தனித்தனியே பதிவு செய்தார். அதில் பெருந்துறை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட தென்றல் நகர், விஜயமங்கலத்தில் ஒரு வீட்டில் நகை மற்றும் பணம் கொல்லை அடித்ததை ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்த எதிரிகளும், நானும், என்னுடைய கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் விஸ்வநாதனும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியும்

கையொப்பமிட்டார். நான் முதலாவதாகவும், இரண்டாவதாக என்னுடைய கிராம நிர்வாக அலுவலக உதவியாளரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம். **பாலுசாமி, மாரியப்பன், ரகு என்கிற முரளிதரன் 3 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். சான்றிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் நகல் அ.சா.ஆ. 3 முதல் 5 வரை குறியீடு செய்யப்படுகிறது.**

3. எதிரிகள் 4 பேரும் , நாங்களும் எதிரிகள் நகைகளை விற்ற போது நகைகளை வாங்கிய நபர்களை அடையாளம் காட்டுவதாக ஒப்புக் கொண்டார்கள். சித்தோடு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** 22.03.2009 ம் தேதி என்ன கிழமை என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எந்தெந்த நாட்கள் எனக்கு பணி நாட்கள் எந்தெந்த நாட்கள் எனக்கு விடுமுறை நாட்கள் என்றால் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை மற்ற நாட்கள் பணி நாள் ஆகும். என்னுடைய வீடு எங்கு உள்ளது என்றால் ஈரோட்டில் உள்ள டீச்சர்ஸ் காலனியில் உள்ளது. விடுமுறை நாட்களில் நான் அங்கு தான் இருப்பேன் என்றால் சரிதான். விடுமுறை நாட்களில் நான் வேறு பணியை செய்ய மாட்டேன் என்றால் என்னுடைய டிபார்ட்மெண்ட்டை சேர்ந்த மேல் அதிகாரி சொன்னால் செய்வேன். காவல்துறை அதிகாரி அழைத்தாலும் நான் செல்வேன்.

2. காவல்துறை அதிகாரி எந்த முறையில் என்னை அழைத்தார் என்றால் P.C என்னுடைய அலுவலகத்துக்கு வந்து காவல் ஆய்வாளர் அழைப்பதாக என்னிடம் தெரிவித்தார். எத்தனை மணிக்கு P.C என்னை அழைத்தார் என்றால் மாலை 6 மணிக்கு அழைத்தார். இந்த பிரச்சனை நடந்த போது நான் அலுவலகத்தில் இருந்தேன் என்றால் சரிதான் என்னை அலுவலகத்தில் வைத்து தான் வர சொன்னார்கள் என்றால் சரிதான். நானும் என் உதவியாளரும் எங்கு சென்றோம் என்றால் சித்தோடு நால் ரோட்டிற்கு சென்றோம். சித்தோடு நால் ரோட்டில் எவ்வளவு நேரம் காத்திருந்தோம் என்றால் ஒரு 10 நிமிடம் காத்திருந்தோம்.

3. காரின் நிறம் என்ன என்றால் தற்போது நினைவில் இல்லை. நான் சொன்ன நபர்கள் காலில் எந்தெந்த இடத்தில் அமர்ந்திருந்தார்கள் என்றால் தற்போது நினைவில்

இல்லை. அவர்களின் வயதினையும் ,அவர்களது அடையாளத்தையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். எதிரி மாரியப்பன் என்கிற ரவி என் முன்னிலையில் கையெழுத்து செய்ததாக சொல்லி உள்ளேன் அவருடைய கையெழுத்தை என்னவென்று எழுதினார் என்றால் தற்போது நினைவில் இல்லை. அந்த ஒப்புதல் வாக்குமூலம் கேள்வி கேட்க கேட்க பதிலாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்களைக் கொண்டது என்றால் தற்போது நினைவில் இல்லை.

4. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் யார் யார் எந்தெந்த பக்கங்களில் கையெழுத்து செய்தார்கள் என்றால் தற்போது நினைவில் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக இருக்க முடியாது என்றால் சரியல்ல. நான் கையெழுத்து செய்ய வேண்டும் என்றால் சீல் வைத்து தான் கையெழுத்து செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் அந்த தேதியில் சம்பவ இடத்திற்கு சென்றதற்கு Movement Register யை ஒப்படைக்க முடியுமா என்றால் முடியாது. நான் சொல்லப்பட்ட தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதாலும் நான் அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை காவல்துறை அதிகாரி கேட்டுக் கொண்டதால் கையெழுத்து செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை